வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி: 02.12.2024 நேரம்: மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------

**தலைப்புச் செய்திகள்**

- எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று 5ஆவது நாளாகவும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.
- இந்திய கடற்படையில், அடுத்த 10 ஆண்டுகளில், 96 கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் சேர்த்துக் கொள்ளப்படும் என, கடற்படைத் தலைவர் அட்மிரல் தினேஷ் திரிபாதி தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரியில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், தலா 5 ஆயிரம் ரூபாய் மழை நிவாரணம் வழங்கப்படும் என முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்துள்ளார்.
- ஃபெஞ்சல் புயல், ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக வலுக் குறைந்து, இன்று வடதமிழக உள் பகுதிகளில் நிலவுவதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-------------------------------

**நாடாளுமன்றம்** 1 (17)

தனியார் தொழில் குழுமத்திற்கு எதிரான லஞ்ச ஊழல் புகார்கள் தொடர்பாக, எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று 5ஆவது நாளாகவும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மக்களவையில், முதலாவது ஒத்தி வைப்பிற்கு பின்னர், அலுவல்கள் மீண்டும் தொடங்கிய சமயத்திலும், காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள், அவையின் மையப் பகுதியில் கூடி, கோஷமிட்ட வண்ணம் இருந்தனர். கூச்சல் குழப்பத்திற்கு இடையிலேயே, கடலோரக் கப்பல் இயக்கம் தொடர்பான மசோதாவை, மத்திய கப்பல்

துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனாவால், அவையில் அறிமுகப் படுத்தினார். அவையில் அமைதிக் காக்கும்படி, அவைத் தலைவர் பலமுறை கேட்டுக் கொண்டும் பலன் இல்லாத நிலையில், அவையின் இன்றைய அலுவல்கள் ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவையிலும், இதே போன்ற சூழ்நிலைக்கு இடையில், அலுவல்கள் முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங், பின்னர் நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசுகையில், காங்கிரஸ் மற்றும் இதர எதிர்கட்சிகளுக்கு, ஜனநாயகத்தில நம்பிக்கை இல்லை என்றும், நாடாளுமன்ற அலுவல்களை

<u>நாடாளுமன்றம் 2 (6)</u>

தடைபடுத்துவதன் மூலம் இக்கட்சிகள், மக்கள் பணத்தை வீணடிப்பதாகவும் குற்றம் சாட்டினார். மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. மணீஷ் திவாரி, செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கையில், முக்கிய பிரச்சனைகள் தொடர்பான எதிர்கட்சிகளின் ஒத்தி வைப்பு தீர்மானத்தை அரசு அனுமதிக்க வேண்டும் என்றார். நாடாளுமன்ற விவாதங்களுக்கு, வேண்டுமென்றே அனுமதி மறுக்கப் படுவதாக, அவர் குற்றம் சாட்டினார்.

----------------------------

<u>கடற்படை 1 (17)</u>

இந்திய கடற்படையில், அடுத்த 10 ஆண்டுகளில், 96 கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் சேர்த்துக் கொள்ளப்படும் என, கடற்படைத் தலைவர் அட்மிரல் தினேஷ் திரிபாதி தெரிவித்துள்ளார். இதில், 62 கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் தற்போது சுயசார்பு இயக்கத்தின் கீழ் கட்டப்பட்டு வருவதாக, கடற்படை தினத்தை முன்னிட்டு, இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் கூறினார். அணுசக்தி மூலம் இயங்கக் கூடிய 2 நீர்மூழ்கிக் கப்பல்களை உள்நாட்டிலேயே தயாரிக்க, மத்திய அரசு ஒப்புதல் அளித்து

இருப்பதாகவும், இத்தகைய கப்பல்கள், 2036-37ஆம் ஆண்டிற்குள் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். ஸ்கார்ப்பியன் ரகத்தைச் சேர்ந்த 3 நீர்மூழ்கிக் கப்பல்களையும், விமானம் தாங்கி கப்பலில் இருந்து இயக்கத் தக்க, ரஃபேல் ரக போர் விமானங்களையும், கொள்முதல் செய்யும் நடைமுறைகள், தற்போது முன்னேறிய கட்டத்தில் இருப்பதாக அவர் கூறினார். பாகிஸ்தானில், கடற்படை வலுப்படுத்தப் படுவதாக கூறப்படுவது குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, பாகிஸ்தானின் போர்க் கப்பல்கள், சீனாவின் உதவியுடன் தயாரிக்கப் படுவதாகவும், அண்டை நாடுகளால்

கடற்படை 2 (5)

ஏற்படும் அச்சுறுத்தல்களை சமாளிக்க, இந்தியா முற்றிலும் தயார் என்றும், அவர் பதில் அளித்தார். இவ்வாண்டு கடற்படை தினம், ஓடிசா மாநிலம் புரியில், வரும் 4ஆம் தேதி கொண்டாடப்படும் என, கடற்படைத் தலைவர் தெரிவித்தார். கடற்படை தினவிழாவில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தலைமை விருந்தினராக கலந்து கொள்வார் என்றும் அவர் கூறினார்.

----------------------------

*இளைஞர்-கோயல் (13)*

எதிர்கால சவால்களுக்கு ஏற்ற கல்வி மற்றும் திறன்களை வழங்குவதன் மூலம், இந்திய இளைஞர்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தி உள்ளார். இன்று புதுடெல்லியில், இந்தியத் தொழில்கள் கூட்டமைப்பின் 29ஆவது கூட்டாண்மை உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், பொருளாதார வளர்சசி-கலாச்சார பாதுகாப்பு இரண்டுக்குமே முக்கியத்துவம் அளிக்கும் நாடாக, இந்தியா தலை நிமிர்ந்து நிற்பதாகக் கூறினார். உலக அளவிலான பருவநிலை மாற்றத்திற்கு, தெற்குலக நாடுகளோ, வளர்ச்சிக் குன்றிய இதர

நாடுகளோ காரணம் அல்ல என்று, அமைச்சர் தெரிவித்தார். உலக நாடுகளின் நீடித்த வளர்ச்சியை உறுதிப் படுத்துவதில், பொதுவான, அதே சமயம், அந்தந்த நாடுகளின் நியாயமான பொறுப்புகளுக்கு ஏற்ற கொள்கைகளை பின்பற்றுதல் அவசியம் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

-----------------------------

முர்மு (10)

இந்திய வருவாய் பணி அதிகாரிகள், சமச்சீர் வரிமுறைகள், மற்றும், பொதுவான நிர்வாக நடைமுறைகள் மூலம், பொருளாதாரத்தை ஒருங்கிணைப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லி ராஷ்ட்ரபதி பவனில், தம்மை சந்தித்த இந்திய வருவாய் பணி அதிகாரிகளிடையே அவர் பேசுகையில், உலக அளவில் மாறி வரும் சமூக பொருளாதார சூழலில், சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பின் அடிப்படையிலேயே, தேசிய நலனுக்கான செயல் திட்டத்தை தீர்மானிக்க முடியும் என்றும், அந்த வகையில், இதர நாடுகளுடனான வர்த்தக உடன்பாடுகளை இறுதி செய்வதில், இந்திய வருவாய் பணி அதிகாரிகளின் பங்கு, மிக முக்கியமானது என்றும் கூறினார்.

-----------------------------

***மழை நிவாரணம்*** 1 (17)

புதுச்சேரியில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், தலா 5 ஆயிரம் ரூபாய் மழை நிவாரணம் வழங்கப்படும் என முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்துள்ளார். இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதுச்சேரி, காரைக்கால், மற்றும், ஏனாம் பகுதிகளில், 10 ஆயிரம் ஹெக்டேர் பயிர்கள் மழையினால் சேதம் அடைந்து இருப்பதாகவும், சேதமடைந்த பயிர்களுக்கு, ஹெக்டேருக்கு 30 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க அரசு முடிவு செய்து இருப்பதாகவும் தெரிவித்தார். மழையினால் 4

மாடுகளும், 16 கிடாரிக் கன்றுகளும் இறந்து போனதாக தெரிவித்த அவர், இதில் மாடு ஒன்றுக்கு 40 ஆயிரம் ரூபாய், கிடாரிக் கன்று ஒன்றுக்கு, 20 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்றார். சேதமடைந்த 50 படகுகளுக்கும், இடிந்து விழுந்த 15 கூரை வீடுகளுக்கு, தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார். புயல்-மழையால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு, தலா 5 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்றும், முதலமைச்சர் அறிவித்தார். மழையினால் சேதமடைந்த வாகனங்களுக்கு உதவி வழங்க காப்பீட்டு நிறுவனத்துடன் பேசி வருவதாகவும் அவர் கூறினார். புதுச்சேரியில், மழையினால் சுமார் 100 கோடி ரூபாய் அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக, முதல்கட்டமாக மத்திய அரசுக்கு கடிதம் எழுதப் பட்டுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

*மழை நிவாரணம்* 2 (12)

ஆற்றங்கரை பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்குள் நீர் புகுவதை தடுக்கும் வகையில், கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது குறித்து, பொதுப் பணித் துறையுடன் பேசி வருவதாகவும் அவர் கூறினார். அரசால் அறிவிக்கப்பட்ட நிவாரண உதவிகள், காலத்தோடு, விரைந்து வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். புதுச்சேரியில் ஃபெஞ்சல் புயல் கரையை கடந்த போது, 48.4 செ.மீ மழை பதிவாயிற்று. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 551 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு, உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டன. 4 ஆயிரம் ஊழியர்கள், பேரிடர் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டனர். தலா 55 பேர் அடங்கிய 2 பேரிடர் மீட்புக் குழுக்கள் மூலமாகவும், மீட்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. இதற்கிடையே, புதுச்சேரியில் மழையினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 6ஆக அதிகரித்து இருப்பதாகவும், தகவல் வெளியாகி உள்ளது.

-----------------------------

*புதுச்சேரி புயல்* 1 (16)

வீடூர் அணையின் உபரி நீரினால் சங்கராபரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால், புதுச்சேரி-விழுப்புரம் சாலையில், ஆரியப்பாளையத்தில் உள்ள பழைய பாலம், வெள்ளத்தில் மூழ்கி உள்ள போதிலும், புதிய பாலம் வழியாக, போக்குவரத்து பராமரிக்கப் படுகிறது. ஆயினும், ஆற்றங்கரை பகுதியில் உள்ள மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது. ஆரியப்பாளையம், மங்கலம், திருக்காஞ்சி உள்ளிட்ட பகுதிகள், மோசமாக பாதிக்கப் பட்டுள்ளன. தென்பெண்ணை ஆற்றின் கிளை ஆறான குடுவையாற்றிலும், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால், சிவராந்தகம், மேல்சாத்தமங்கலம், கீழ்சாத்தமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில், வெள்ளம் சூழ்ந்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள், அந்தந்த பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில், தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டு, உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வழங்கப்படுகின்றன. மின்சார பம்புகள் மூலம் வெள்ள நீரை வெளியேற்றவும், துண்டிக்கப்பட்ட மின் வினியோகத்தை சீர்படுத்தவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடமாடும் ஜெனரேட்டர் மூலம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீரேற்றி,

*புதுச்சேரி புயல்* 2 (6)

மக்களுக்கு குடிநீர் வழங்கப் படுவதாக, வேளாண் அமைச்சர் திரு. ஜெயகுமார் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சங்கராபரணி ஆற்றின் நோனாங்குப்பம் கரைப் பகுதியில், இந்திய ராணுவத்தின் நிவாரணக் குழு, பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளது. என்.ஆர் நகர் கரைப் பகுதியில், தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மூலம், மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

-----------------------------

ஆய்வு (9)

வீடூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப் பட்டதால், சங்கராபரணி ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கையும், ஆரியப் பாயைத்தில், சங்கராபரணி ஆற்றின் வெள்ளப் பெருக்கையும், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் இன்று நேரில் பார்வையிட்டார். தொடர்ந்து, சாத்தனூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட நீரால், தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கையும், அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும், அவர் பார்வையிட்டார். பாகூரில், வெள்ளத்தால் சூழப்பட்டுள்ள கிராமங்களையும் துணை நிலை ஆளுநர் நேரில் சென்று பார்த்தார்.

-----------------------------

*வானிலை (19)*

நேற்று காலை, வடதமிழகம் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் நிலவிய ஃபெஞ்சல் புயல், நேற்று பிற்பகல், ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும், நேற்று மாலை, காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும், இன்று காலை, ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதியாகவும், படிப்படியாக வலுக் குறைந்து, தற்போது வடதமிழக உள் பகுதிகளில் நிலவுகிறது. இது நாளை காலை, மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளுக்கு நகரக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், திருச்சி, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் கனமழைக்கும், கோவை மாவட்டத்தின் சமவெளிப் பகுதிகள், திருப்பூர், தேனி, திண்டுக்கல், மற்றும் ஈரோடு பகுதிகளில், மிக கனமழைக்கும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி மாவட்டத்தின் ஒருசில இடங்களில், அதி கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கிருஷ்ணகிரி

மாவட்டம் ஊத்தங்கரையில், 50 செ.மீ மழை பதிவாகி உள்ளது. திருக்கனூரில், 11 செ.மீ, மற்றும், பாகூரில், 8 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 2 செ.மீ மழை பெய்துள்ளது.

-----------------------------

நிலக்கரி (11)

நாட்டின் மொத்த நிலக்கரி உற்பத்தி, கடந்த 8 மாதங்களில், 112 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடுகையில், சுமார் 35 சதவிகிதம் அதிகம் என மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. நிலக்கரி சுரங்கங்களில் இருந்து, மின்சார உற்பத்தி, மற்றும், இதர தேவைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் நிலக்கரியின் அளவும் கடந்த 8 மாதங்களில், 34 சதவிகிதம் அதிகரித்துள்ளது. உள்நாட்டு எரிசக்தித் திறன்களுக்கு முன்னுரிமை அளித்து, இறக்குமதியை சார்ந்துள்ள நிலையை குறைப்பதன் மூலம், முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை பிரதிபலிக்கும் வகையில், இந்த வளர்ச்சி அமைந்து இருப்பதாக, அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

-----------------------------